ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1915/18 - 2015 මැයි මස 20 වැනි බදාදා - 2015.05.20

1915/18 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கிழக்கு மாகாண, மட்டக்களப்பு மாவட்டத்தில், ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில், கொடவாமடு கிராமத்தில் காடுவாமடு (195A ) கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ளதும், நில அளவை மாஅதிபரால் தயாரிக்கப்பட்ட வரைபடம் பிபி/மட/2591 இல் காட்டப்பட்டதுமான 0.0840 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்டதுமான கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டு:

**துண்டு இல: 1**

காணியின் பெயர்: நேரக்குடா கண்டம்; விபரம்: தற்போதைய பயன்பாடு: சேனைப் பயிர்ச் செய்கை; உரிமை கோருவோர்: திருமதி ஜெயமாலினி லோகிதராஜா; விஸ்தீரணம்: 0.0840 ஹெக்டயார்.

எல்லைகள்:-

வடக்கு: TP 99488, காணித்துண்டு இல. 3 இன் PP A515; கிழக்கு: காணித்துண்டு இல. 3, 6 கள் PP A515; தெற்கு: காணித்துண்டு இல.6 இன் PP A515, ஆறு; மேற்கு: TP 99488;

மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றி அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. உதயஸ்ரீதர்,<br>
பிரதேச செயலாளர்,<br>
ஏறாவூர்பற்று.

பிரதேச செயலகம்,<br>
ஏறாவூர்பற்று ,<br>
செங்கலடி.

06– 105